# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | Dhasaradhan |
| Father/Husband Name | கிருஷ்ணமூர்த்தி |
| Calling/Occupation | ஓட்டுனர் |
| Age | 45 |
| Address | கம்மவார்புதூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் கம்மவார்புதூரில் வசிக்கிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். 2024 ஆம் ஆண்டு TN 23 N 2264 என்ற பேருந்தில் ஓட்டுனராக வேலை செய்தேன். நடேசன் நடத்துனராக வேலை செய்தார். அன்று காலை டிப்போவிலிருந்து பேருந்தை எடுத்து வந்து லத்தேரி கேட்டிலிருந்து அடுக்கம்பாறை ஓட்டி கொண்டு வந்தோம். அன்று மாலை லத்தேரி கேட்டிலிருந்து மாலை 05.30 மணிக்கு பேருந்தை எடுத்து கொண்டு விருதம்பட்டு பிள்ளையார் கோயில் அருகே சென்று

கொண்டிருந்தபோது இருச்சக்கர வாகனத்தில் 2 நபர்கள் வந்தார்கள். அவர்களை பார்த்தால் அடையாளம் தெரியும். ஆஜர் எதிரிகளை சாட்சி அடையாளம் காண்பித்து எதிரி ரஞ்சித்குமார் என்பவரை அடையாளம் காண்பித்து அவர் இருச்சக்கர வாகனம் ஓட்டி வந்தவர் என்றும் பக்கத்தில் இருக்கும் எதிரி மனுவேல் அகஸ்டின் என்பவரை அடையாளம் காண்பித்து அவர் இருச்சக்கர வாகனத்தில் பின்னல் அமர்ந்து வந்தவர் என்று அடையாளம் காட்டினார்.

அவர்கள் இருவரும் எனக்கு எதிரே வந்தவர்கள். வாகனத்திற்கு எதிரே சாலையின் நடுவே இருச்சக்கர வாகனத்தை நிறுத்தி கொண்டார்கள். நான் ஆர்ன் அடித்தேன். அவர்கள் இருவரும் கெட்ட வார்த்தைகளால் தேவிடியா பையா என்று அசிங்கமாக என்னையும் நடத்துனரையும் திட்டினார்கள். வண்டியை நான் நிறுத்திவிட்டு இறங்கி போய் ஏன் இவ்வாறு செய்கீறிர்கள் என்று ஆஜர் எதிரிகளிடம் கேட்டபோது எங்கள் ஊருக்கு வந்து ஏன் ஆர்ன் அடிக்கிறாய் நாங்கள் வைக்கிறது தான் சட்டம் என்று சொல்லி எதிரி மேனுவல் அகஸ்டினை அடையாளம் காண்பித்து கல்லால் பேருந்து கண்ணாடியை உடைத்துவிட்டதாக சாட்சியம் அளித்தார்.

மேலும் எதிரி மேனுவல் அகஸ்டின் என்னை இடது கன்னத்தில் அடிக்க வந்தார். நான் திரும்பிவிட்டேன். என்னுடைய கன்னத்தில் அடி விழுந்தது. பேருந்தின் முன் பக்க கண்ணாடியை உடைத்து

அவர்கள் இருச்சக்கர வாகனத்தை எடுத்து கொண்டு போய்விட்டார்கள். 2வது எதிரி ரஞ்சித்குமார் என்பவர் 1வது எதிரி மேனுவல் அகஸ்டின் என்பவரிடம் அவ்வாறு செய்யாதே என்று சொன்னார் ஆனால் அவர் சொல்லியும் கேட்காமல் என்னையும் அடித்து பேருந்தின் முன் பக்க கண்ணாடியை உடைத்தார். பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் தான் என்னிடம் காண்பிக்கப்படுவது. அந்த புகார் **அ.த.சா.ஆ. 1** ஆகும். முன் பக்க கண்ணாடி முழுவதும் உடைந்துவிட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

என்னிடம் காண்பிக்கப்படும் செங்கல்லால் தான் முதல் எதிரி கண்ணாடியை உடைத்தார். உடைந்த கண்ணாடி துண்டுகள் என்னிடம் காண்பிக்கப்படுவது. செங்கல் **சா.பொ.1** மற்றும் உடைந்த கண்ணாடி துண்டுகள் **சா.பொ. 2 வரிசை** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் பச்சை கலர் இருச்சக்கர வாகனம் தான் எதிரிகள் சம்பவத்தின் போது பயன்படுத்திய இருச்சக்கர வாகனம். அந்த இருச்சக்கர வாகனம் **சா.பொ. 3** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

டி.கே. புரத்திலிருந்து விருதம்பட்டு நோக்கி செல்லும் சாலை கிழக்கு மேற்கு சாலை என்றால் சரிதான். அதே மாதிரி விஷ்ணு தியேட்டலிருந்து குமரன் மருத்துவமனைக்கு செல்லும் சாலை

தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி செல்லும் சாலை என்றால் சரிதான். காட்பாடி தெற்கிலிருந்து வடக்கு ரோடு என்றால் சரிதான். டி.கே. புரத்திலிருந்து விருதம்பட்டு நோக்கி வரும் சாலை 12 அடி சாலை என்றால் 10 அடி தான் இருக்கும். அந்த சாலை குறுகலான சாலை என்றும் எதிரே இருச்சக்கர வாகனங்கள் கூட ஒரு சில இடங்களில் வந்தால் ஒதுங்குவதற்கு இடம் கிடையாது. அதே போன்று சம்பவம் நடந்த இடம் குறுகலான சாலை. எதிரில் இருச்சக்கர வாகனம் கூட கடந்து போக முடியாது. இரண்டு பக்கங்களிலும் அந்த சாலை முழுவதும் வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

மெயின் ரோட்டிலிருந்து பிள்ளையார் கோயில் சுமார் 100 மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். விருதம்பட்டிலிருந்து டி.கே. புரம் செல்லும் சாலை தேவி கருமாரியம்மன் கோயில் அருகிலிருந்து புறப்பட்டு செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த சாலை எப்போதும் மக்கள் நடமாட்டம் மற்றும் போக்குவரத்து நெரிசல் உள்ள இடம் என்றால் சரிதான். போலீசார் 10 நிமிடத்தில் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர் விசாரணை செய்து 6–7 நபர்களை காவல் நிலையம் அழைத்து கொண்டு போனார்கள் என்றால் சரிதான்.

காவல் நிலையம் அழைத்து சென்று அவர்கள் சொல்ல நான் எழுதி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவலர்கள் சொன்னதின் அடிப்படையில் நான் எழுதி கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.

மேனேஜருக்கு தகவல் சொல்லி அவரும் காவல் நிலையம் வந்துவிட்டார் என்றால் ஆமாம். ஆஜர் எதிரிகள் இருவரும் போதையில் இருந்தார்கள் என்றால் ஆமாம். அவர்கள் போதையில் இருந்ததால் தான் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகளை உட்கார வைத்தார்கள் என்றால் இல்லை.

ஸ்பீடு பிரேக்கர் மேல் ஏறி பேருந்து கீழே இறங்கினால் கண்ணாடி உடைய வாய்ப்புள்ளதா என்றால் அதிக வேகமாக சென்று வேக தடையை கவனிக்காமல் வேகத்தடை மீது ஏறி இறங்கினால் கண்ணாடி உடைய வாய்புண்டு. புகார் எந்த தேதியில் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் அது சரியாக நினைவில்லை.

போலீசார் எழுதிய பேப்பரில் இடைவெளி விட்டு கையொப்பம் வாங்கினார்கள் என்றால் அது என்னுடைய கையொப்பம் தான். பொது மக்கள் 50-60 பேர் சேர்ந்திருப்பார்களா என்றால் சேர்ந்திருப்பார்கள். என் முன்னிலையில் எந்த பொருளும் போலீசார் கைப்பற்றவில்லை என்றால் தவறு போலீசார் செங்கல்லை சம்பவ இடத்திலேயே எடுத்தார்கள். ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சான்று பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று பணியிலிருந்தேன் என்பதற்கு Trip sheet புகாருடன் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்தேன். அவ்வாறு நான் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

முதல் எதிரி என்னை அசிங்கமாக திட்டி கையால் கன்னத்தில் அடித்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.27 17:05:49 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.2)

| | |
|---|---|
| Name | Natesan |
| Father/Husband Name | Velayudam |
| Calling/Occupation | நடத்துனர் |
| Age | 40 |
| Address | வஞ்சூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் வஞ்சூரில் வசிக்கிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணி செய்கிறேன். அ.சா.1 தசரதன் என்னுடன் ஓட்டுனராக வேலை பார்த்தார். TN 23 N 2264 என்ற பேருந்தில் அ.சா.1 ஓட்டுனராகவும் நான் நடத்துனராகவும் இருந்தோம். 29.02.2024 அன்று லத்தேரி கேட்டிலிருந்து அடுக்கம்பாறைக்கு செல்லும் போது மாலை சுமார் 05.30 மணிக்கு நடையெடுத்து சென்றபோது விருதம்பட்டு பிள்ளையார் கோயில் அருகே மாலை சுமார் 06.00 மணியளவில் நாங்கள் பேருந்தில் சென்று

கொண்டிருக்கும்போது 2 நபர்கள் இருச்சக்கர வாகனத்தில் வந்தார்கள். நான் பேருந்தில் பின் பக்கம் இருந்தேன். அந்த சாலை மிகவும் குறுகலான சாலை. வழி விடாமல் இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்கள் நிறுத்திவிட்டார்கள். அதனால் அ.சா.1 ஆர்ன் அடித்தார். நான் முன் பக்கம் சென்று பார்த்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் இருச்சக்கர வாகனத்தில் வந்து வாகனத்திற்கு வழி விடாமல் நின்றவர்கள். அதனால் ஓட்டுனர் கீழே இறங்கி போனார். நானும் போனேன். எதற்கு ஆர்ன் அடிக்கிறாய் என்று ஓத்தா ங்கொம்மா என்று அசிங்கமாக திட்டி திடீரென்று செங்கல் எடுத்து பேருந்தின் முன் பக்க கண்ணாடியை முதல் எதிரி உடைத்தார். 2 வது எதிரி இருச்சக்கர வாகனத்தை ஓட்டி கொண்டு வந்தவர். ஓட்டுனரை வந்த 2 எதிரிகளில் ஒருவர் கன்னத்தில் அடித்துவிட்டார். அதை நான் பார்க்கவில்லை. கண்ணாடியை உடைத்து விட்டு அவர்கள் இருச்சக்கர வாகனத்தில் தப்பித்துவிட்டார்கள். இது சம்மந்தமாக போலீசாரிடம் அ.சா.1 புகார் கொடுத்தார். என்னை போலீசார் விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் செங்கல்லால் தான் எதிரி பேருந்தின் கண்ணாடியை உடைத்தார். அதே போன்று காண்பிக்கப்படும் இருச்சக்கர வாகனத்தில் தான் எதிரிகள் வந்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பேருந்தில் பின் பக்கம் நான் டிக்கெட் கொடுத்து கொண்டு

இருந்தால் முன்னாள் என்ன நடக்கிறது என்று தெரியாது என்றால் ஆமாம். சம்பவம் நடந்த சாலை குறுகலான சாலை என்றால் சுமார் 10 அடி தார் சாலை. பேருந்து செல்லும்போது வேறு எந்த வாகனமும் எதிரில் ஒதுங்க முடியாது என்றால் சரிதான். சாலையின் இரண்டு பக்கமும் நிறைய வீடுகளும் கடைகளும் உள்ளது என்றால் சரிதான். போலீசார் 10 நிமிடத்தில் சம்பவ இடம் வந்துவிட்டார்கள் என்றால் ஆமாம். விசாரித்து எங்களிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். கையொப்பம் போட்டோம் என்றால் ஆமாம். சம்பவ இடம் ஜன நடமாட்டம் மற்றும் போக்குவரத்து அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான்.

மேனேஜருக்கு தகவல் சொல்லி மாலை 06.30 மணிக்கு வந்தாரா என்றால் வந்தார். சுமார் 10–20 பேர் கும்பல் சேர்ந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். போலீசார் 6 பேரை அழைத்து கொண்டு போனார்களா என்றால் இல்லை அங்கு வந்து விசாரித்தார்கள். யாரையாவது அழைத்து கொண்டு போய் விசாரித்தார்களா என்றால் இல்லை.

பேருந்து வேகமாக சென்று வேகத்தடை மீது ஏறி இறங்கினால் பேருந்து கண்ணாடி உடைய வாய்ப்புள்ளது என்றால் இல்லை. எதிரிகளை போலீசார் சொல்லி தான் அடையாளம் காண்பித்தேன் என்றால் இல்லை. நாங்கள் அன்று பணியிலிருந்தோம் என்பதற்கு trip sheet யை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் நினைவில்லை.

கும்பலில் யாரோ பேருந்தின் கண்ணாடியை உடைத்துவிட்டார்கள் என்றும் எதிரிகள் போதையில் இருந்ததால் அவர்களை அழைத்து கொண்டு போய் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் இல்லை எதிரிகள் தான் பேருந்து கண்ணாடியை உடைத்தார்கள். சான்று பொருட்கள் இந்த வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்டவை என்றும் ஓட்டுனரை அசிங்கமாக திட்டி அடித்துவிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.27 17:05:59 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.3)

| | |
|---|---|
| Name | Elango |
| Father/Husband Name | Subramani |
| Calling/Occupation | Fitter |
| Age | 60 |
| Address | Viruthampet |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விருதம்பட்டில் வசிக்கிறேன். நான் பிட்டராக பணியிலிருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா. 1 மற்றும் அ.சா.2 யை தெரியுமா என்றால் எங்கள் தெரு வழியாக போகும் பேருந்தின் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் என்பதால் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னடைய வீடு பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. அந்த சாலை 15 அடி சாலை. சுமார் 20 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலையை முடித்துவிட்டு வந்தபோது என் வீட்டு முன்பு அரசு பேருந்து

கண்ணாடியை வந்த 2 நபர்களில் ஒரு நபர் உடைத்துவிட்டதாக சொன்னார்கள். யார் உடைத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. போலீசார் விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

கு.வி. அரசு தரப்பில்

கடந்த 29.02.2024 அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் நான் பிள்ளையார் கோயில் தெருவில் இருந்தபோது TN 23 N 2264 என்ற அரசு பேருந்து விருதம்பட்டு வழியாக அடுக்கம்பாறை சென்றபோது என் வீட்டு வாசல் வழியாக பேருந்து சென்றபோது எதிரிகள் இருவரும் இருச்சக்கர வாகனத்தில் வந்து சாலையின் நடுவே நிறுத்தி பேருந்தை போகவிடாமல் தடுத்தபோது ஓட்டுனர் ஆர்ன் அடித்தபோது எதிரிகள் அசிங்கமாக திட்டினார்கள் என்றும் இறங்கி கேட்டபோது அ.சா.1 யை முதல் எதிரி அசிங்கமாக திட்டி அவருடைய சட்டையை பிடித்து இடது பக்க கன்னத்தில் அடித்துவிட்டார் என்றம் ரோட்டின் ஓரமாக இருந்த செங்கல்லை எடுத்து பேருந்தின் முன் பக்க கண்ணாடியை உடைத்துவிட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.27 17:06:06 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 225 of 2025
Prosecution Witness No.P.W. 4(L.W.4)

| | |
|---|---|
| Name | Rajesh |
| Father/Husband Name | Kannadasan |
| Calling/Occupation | கூலி |
| Age | 31 |
| Address | 124, பிள்ளையார் கோயில் தெரு, விருதம்பட்டு, வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விருதம்பட்டில் வசிக்கிறேன். விருதம்பட்டு பிள்ளையார் கோயில் தெருவில் வீடு உள்ளது. நான் மேஸ்திரி தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 மற்றும் அ.சா.2 யை தெரியும். அவர்கள் எங்கள் ஊர் வழியாக செல்லும் பேருந்தில் பணி செய்பவர்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலையை முடித்துவிட்டு மாலை சுமார் 06.45 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். அங்கிருந்த பொது மக்கள் அரசு பேருந்து கண்ணாடியை யாரோ உடைத்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் அங்கு வந்து

உன் தெருவில் தான் சம்பவம் நடந்தது என்று சொல்லி விசாரிக்க வந்தோம் என்று சொன்னார்கள். நான் நேரடியாக சம்பவத்தை பார்க்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

கு.வி. அரசு தரப்பில்

கடந்த 29.02.2024 அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் நான் பிள்ளையார் கோயில் தெருவில் இருந்தபோது TN 23 N 2264 என்ற அரசு பேருந்து விருதம்பட்டு வழியாக அடுக்கம்பாறை சென்றபோது என் வீட்டு வாசல் வழியாக பேருந்து சென்றபோது எதிரிகள் இருவரும் இருச்சக்கர வாகனத்தில் வந்து சாலையின் நடுவே நிறுத்தி பேருந்தை போகவிடாமல் தடுத்தபோது ஓட்டுனர் ஆர்ன் அடித்தபோது எதிரிகள் அசிங்கமாக திட்டினார்கள் என்றும் இறங்கி கேட்டபோது அ.சா.1 யை முதல் எதிரி அசிங்கமாக திட்டி அவருடைய சட்டையை பிடித்து இடது பக்க கன்னத்தில் அடித்துவிட்டார் என்றம் ரோட்டின் ஓரமாக இருந்த செங்கல்லை எடுத்து பேருந்தின் முன் பக்க கண்ணாடியை உடைத்துவிட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.27 17:06:13 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.5)

| | |
|---|---|
| Name | Baskar |
| Father/Husband Name | Madhavan |
| Calling/Occupation | கூலி |
| Age | |
| Address | 1/131, பிள்ளையார் கோயில் தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விருதம்பட்டு பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கிறேன். நான் Water Purifier company ல் வேலை செய்கிறேன். இந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலையை முடித்துவிட்டு மாலை சுமார் 07.30 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். 08.00 மணிக்கு போலீசார் வந்திருந்தார்கள். பேருந்து கண்ணாடியை உடைத்துவிட்டார்கள் தெரியுமா என்று கேட்டார்கள் எனக்கு தெரியாது என்று சொன்னேன். சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கிருந்தவர்களை விசாரித்து எழுதி கையொப்பம்

வாங்கி கொண்டார்கள். அதற்காக நான் சாட்சி கையொப்பம் போட்டேன். மேலும் அந்த இடத்திலிருந்த பேருந்து கண்ணாடி மற்றும் உடைந்து போன செங்கல் ஒன்றை போலீசார் கைப்பற்றினார்கள். அதற்காகவும் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ. 2** மற்றும் கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ. 3** ஆகும். மேலும் சம்பவ இடத்தை பார்த்து படமும் வரைந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே போலீசார் அங்கிருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் கையொப்பம் போட்டு கொடுத்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் ஆமாம். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம்.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.27 17:06:19 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.6 (L.W.7)

| | |
|---|---|
| Name | Subian |
| Father/Husband Name | Soughad Ali |
| Calling/Occupation | கூலி |
| Age | 36 |
| Address | விரிஞ்சிபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விரிஞ்சிபுரத்தை சேர்ந்தவர். நான் sweetcorn வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையதுதான். நானும் துரை என்பவரும் 01.03.2024 அன்று காலை சுமார் 08.30 மணியளவில் வியாபாரம் செய்து கொண்டிருந்தோம்.

பிள்ளையார் கோயில் தெருவிற்கு பக்கத்தில் உள்ள ஒரு தெருவில் 2 நபர்களை போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். பேருந்து

கண்ணாடியை உடைத்துவிட்டதாகவும் அவர்களை விசாரணை செய்து கொண்டிருக்கிறோம் என்றும் சொன்னார்கள். அவர்கள் இருவரும் ஆஜர் எதிரிகள் தான்.

அவர்களை விசாரிக்கிறோம் சாட்சியமாக இருங்கள் என்று சொன்னார்கள் நாங்கள் சாட்சியமாக இருந்தோம். போலீசார் எதிரிகளை விசாரித்தார்கள். நடந்ததை அவர்கள் ஆமாம் என்று சொன்னார்கள். அதை போலீசார் டைப் செய்து கொண்டார்கள். அதற்காக நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதன் பிறகு நாங்கள் வியாபாரத்திற்கு சென்றுவிட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் **அ.த.சா.ஆ. 4** ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் **அ.த.சா.ஆ. 5** ஆகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் இருச்சக்கர வாகனம் குறித்து எனக்கு எதுவும் நினைவில்லை. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. போலீசார் விசாரித்தார்கள்.

**சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

கு.வி. அரசு தரப்பில்

எதிரிகள் இருவரும் சம்பவத்தின் போது பயன்படுத்திய இருச்சக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கொண்டனர் என்றால் இருச்சக்கர

வாகனம் இருந்தது ஆனால் என்ன வாகனம் என்று நினைவில்லை. எங்களிடம் அதற்காக கையொப்பம் கேட்டார்கள். கையொப்பம் போட்டு கொடுத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பமிட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.07.27 17:06:28 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.7 (L.W.8)

| | |
|---|---|
| Name | Durai |
| Father/Husband Name | |
| Calling/Occupation | கூலி |
| Age | 52 |
| Address | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விருதம்பட்டில் வசிக்கிறேன். நான் வெங்காய வியாபாரம் செய்கிறேன். சுபியான் என்பவரை தெரியும். அவர் மக்காச்சோள வியாபாரம் செய்கிறார். 01.03.2024 அன்று சுமார் காலை 08.30 மணிக்கு நானும் அவரும் ஆட்டோவில் வியாபாரம் செய்து கொண்டு காளியம்மன் கோயில் தெருவில் சென்று கொண்டிருந்தபோது 2 போலீசார் இருந்தார்கள். அவர்களுடன் ஆஜர் எதிரிகள் 2 பேரும் இருந்தார்கள். எங்கள் முன்பு போலீசார் எதிரிகளை விசாரித்தார்களா என்றால் தெரியவில்லை. பேருந்து கண்ணாடியை

உடைத்துவிட்டார்கள் கையொப்பம் போட சொன்னார்கள், நானும் கையொப்பம் போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பங்கள் மட்டும் முறையே **அ.த.சா.ஆ. 6 மற்றும் அ.சா.ஆ. 7** ஆகும். வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

கு.வி. அரசு தரப்பில்

கடந்த 29.02.2024 அன்று நடந்த சம்பவம் குறித்து 01.03.2024 அன்று காலை சுமார் 08.30 மணியளவில் காளியம்மன் கோயில் தெருவில் போலீசார் எதிரிகள் இருவரையும் பிடித்து கைது செய்து விசாரித்தபோது எதிரி மேனுவல் அகஸ்டின் என்பவர் தாமாக குற்றத்தை ஒப்பு கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்பு ஆய்வாளர் பதிவு செய்து அதில் எதிரியின் ஒப்பம் மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்று அதன் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து சம்பவத்தின் போது பயன்படுத்திய இருச்சக்கர வாகனத்தை மகசரில் போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி அதில் கையொப்பம் பெற்றனர் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரண–இல்லை

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.27 17:06:40 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.225 of 2025
Prosecution Witness No.P.W.8 (L.W.9)

| | |
|---|---|
| Name | Thiru. Manickam |
| Father/Husband Name | Perumal |
| Calling/Occupation | R.T.O. |
| Age | 58 |
| Address | R.T.O. Office, Theni |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

(A1 produced and A2 Present)

(மேற்படி சாட்சியத்தை Principal District Court, Theni யிலிருந்து Video conference மூலம் சாட்சி சொல்ல சொல்ல பதியப்பட்டு சாட்சிக்கு இந்த சாட்சியத்தின் PDF மின்னஞ்சல் மூலம் Principal District Court, Theni அவர்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு VC co–ordinator மூலம் சாட்சி அதை படித்து பார்த்து அதை hard copy–ல் கையொப்பம் போட்டு இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.)

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனி வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த

06.03.2024 அன்று பிற்பகல் 01.40 மணியளவில் வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணி செய்தபோது விருதம்பட்டு காவல் நிலைய குற்ற எண்.78/2024 வழக்கில் சம்மந்தப்பட்ட TN 23 N 2264 என்ற Tata Motors அரசு பேருந்தை ஆய்வு செய்து அறிக்கை தரும்படி கேட்டு கொண்டதின் பேரில் நான் அன்று மேற்கண்ட வாகனத்தை ஆய்வு செய்தேன். வாகனத்தின் முன் காற்று தடுப்பான் கண்ணாடி உடைந்து காணப்பட்டது. தடைத்திறன் நல்ல நிலையில் இருந்தது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். இது குறித்து நான் வழங்கிய ஆய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆகும்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.27 17:06:47 +0530